மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண். 66/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்:செய்யது அலி பாத்திமா | தேதி : 27.01.26
வயது : | த/பெ : அபுசாலி முகைதீன்
கிராமம் : | தொழில் :
மாவட்டம்:

---

<u>27.01.26 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி மற்றும் வாதி தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.28.12.2011 ல் எனக்கும், பிரதிவாதிக்கும் நடந்த திருமணத்தின் அழைப்பிதழை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். எங்களது திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படத்தினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். என் ஆதார் அட்டையின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு வா.சா.ஆ 3 குறியீடு செய்யப்படுகிறது. என் வாக்காளர் அடையாள அட்டையின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு வா.சா.ஆ 4 குறியீடு செய்யப்படுகிறது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.27 18:50:30 +0530

3.என் நிரந்தர கணக்கு அட்டையின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு வா.சா.ஆ 5 குறியீடு செய்யப்படுகிறது. என் மகன் முகமது இசாத்தின் பிறப்பு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆகும். எனக்கும், பிரதிவாதிக்கும் இருந்த திருமண உறவை இஸ்லாமிய முறைப்படி ரத்து செய்து குலா என்னும் திருமண முறிவு கடிதம் அனுப்பியதற்கான நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகளை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 7 ஆகும்.

4.நான் அனுப்பிய திருமண முறிவு கடிதத்தை பிரதிவாதி மற்றும் செய்துங்கநல்லூர் ஜமாத், சாந்தி நகர் ஜமாத் ஆகியோர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகளை (3 எண்ணம்)தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 8 ஆகும். 25.09.2023 ல் செய்துங்கநல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜாமிய பள்ளிவாசல் ஜமாத் தலைவர் வழங்கிய கடிதத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 9 ஆகும்.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.27 18:50:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.